# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) சட்டம்*

---

*(2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, யூலை மாதம் 14 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 15.25** **தபாற் செலவு: ரூபா 7.50**

**2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) சட்டம்**

[*2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்டது*].

*ச.வ.ஒ.– 37/2003*

**தனியார் மருத்துவ நிறுவனங்களைப் பதிவுசெய்தல், ஒழுங்கு படுத்தல், கண்காணித்தல் மற்றும் சோதனைகள் செய்தல் என்பவற்றுக்கு ஏற்பாடு செய்வதற்கும் ; தனியார் மருத்துவ நிறுவனங்களின் அபிவிருத்தியைப் பேணி வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*பாயிரம்.*

*அரசாங்கத்திற்கு, பொதுமக்களுக்கு பாதுகாப்பானதும் வினைத் திறனானதும் ஆன மருத்துவ சேவையை வழங்குகின்ற அக்கறை யாலும், தனியார் மருத்துவ நிறுவனங்கள் ஊடாக மருத்துவ சேவைகளை ஏற்பாடு செய்வது தொடர்பில் தேசியக் கொள்கையை உருவாக்குவதற்கும் மற்றும் அதனுடைய குறிக்கோள்களை அடைவதற்கு அத்தகைய சேவைகள் ஏற்பாடுசெய்யப்பட வேண்டிய முறையை இனம் காண வேண்டியது அவசியமாக உள்ளதாலும் :*

*ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுசெய்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக்குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*தனியார் மருத்துவ நிறுவனங்கள் மற்றும் அவற்றை தொழிற்படுத்து கின்ற ஆட்களும் பதிவு செய்யப்பட வேண்டு மென்பது.*

**2.** (1) ஆளெவரும், இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடு களின் நியதிகளின்படி அதன்சார்பில் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் அதிகாரத்தின் கீழன்றி தனியார் மருத்துவ நிறுவன மொன்றை –

(அ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வளவினுள் தாபித்தலோ அல்லது பேணுதலோ ; அல்லது

(ஆ) தொழிற்படுத்தலோ அல்லது எவரேனும் வேறு ஆளை தொழிற்படுத்துவதற்கு அனுமதித்தலோ,

ஆகாது.

2 –PL 000980– 1,300 (2006/02)

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

பதிவு செய்தலுக்கான விண்ணப்பம்.

**3.** (1) பதிவுச் சான்றிதழ் ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அந்தந்த மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஊடாக தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் பேரவைக்கு செய்யப்படவேண்டும் என்பதுடன் விதித்துரைக்கப்பட்ட கட்டணம் மற்றும் வேறு எல்லா இயைபான ஆவணங்களுடனும் சேர்த்து அனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பங்களைப் பெற்றதன் மேல், தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் பேரவை இயைபான விண்ணப்பம் எந்த தனியார் மருத்துவ நிறுவனம் மற்றும் வளவுகள் தொடர்பானதோ அந்த தனியார் மருத்துவ நிறுவனம் மற்றும் வளவுகள், விதித்துரைக்கப்படக் கூடியவாறான கட்டளைக்கற்களைத் திருப்திப்படுத்துகின்றவிடத்து, அத்தகைய நிறுவனம் மற்றும் வளவுகளைப் பதிவுசெய்தலுக்கான ஆட்சேபனை எதுவும் அதற்கு இல்லையென அந்தந்த மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் பின்வருவனவற்றைச் செய்யும்படி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைப் பணித்தலும் வேண்டும் :—

(அ) தனியார் மருத்துவ நிறுவனம் மற்றும் அதன் வளவுகளை தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் பேரவையுடன் பதிவுசெய்யும்படியும், அத்தகைய நிறுவனத்தைப் பேணுவதற்குப் பதிவு செய்யப்பட்ட ஆளாக விண்ணப்பகாரரையும் பதிவு செய்யும்படியும் ; அத்துடன்

(ஆ) விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பதிவுச் சான்றிதழை விண்ணப்பகாரருக்கு அனுப்பும்படியும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் ஒன்று அதன்கண் குறித்துரைக்கப்படவேண்டியதான அத்தகைய காலப் பகுதிக்கு செல்லுபடியானதாதல் வேண்டும்.

(4) பதிவுச் சான்றிதழ் ஒன்று (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட முறையில் அதன்சார்பில் செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது அத்தகைய பதிவு முடிவுறும் தேதிக்கு ஒரு மாதத்துக்கு முன்னரும் விதித்துரைக்கப்பட்ட புதுப்பித்தற் கட்டணத்தை கொடுப்பனவு செய்வதன் மேலும் புதுப்பிக்கப்படல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒவ்வொருவரினாலும் சேகரிக்கப்படும் கட்டணத்தின் ஐம்பது சதவீதம் அந்தந்த மாகாணசபைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(6) மாகாணத்தின் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவருடைய கடமைகளை நிறைவேற்றுவதில் தனியார் மருத்துவ நிறுவனங்களைப் பதிவுசெய்வது தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய வழிகாட்டு நெறிகளுடன் இணங்கியொழுகிச் செயலாற்றுதல் வேண்டும்.

*பதிவு செய்தலின் பயன்.*

**4.** (1) இரண்டாம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளவாறு பதிவு செய்யப்படாமல் எவையேனும் வளவுகளில் எவரேனும் ஆளினால் ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனம் தொழிற்படுத்தப்படுகின்ற அல்லது பேணப்படுகின்றவிடத்து, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அத்தகைய நிகழ்வை தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் பேரவைக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன் ஒழுங்குபடுத்தும் பேரவையானது ஒரு பணிப்புரையில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய நிறுவனத்தை உடனடியாக ஒழுங்குபடுத்தும் பேரவையுடன் பதிவுசெய்துகொள்ளும்படி அத்தகைய பணிப்புரையை வழங்குதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஒழுங்குபடுத்தும் பேரவையினால் வழங்கப்பட்ட பணிப்புரை ஒன்றுடன் இணங்கியொழுகாமையானது இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் நிறுவனம், அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒருமாத காலத்தின் பின்னர் அத்தகைய தவறைத் தொடர்ந்து புரியுமிடத்து, நீதிவான், ஒழுங்குபடுத்தும் பேரவையினால் மூடுகைக் கட்டளைக்காக விண்ணப்பம் செய்யப்படுவதன்மீது குற்றத்

தீர்ப்பளிக்கப்பட்ட நிறுவனம் அல்லது ஆள், (1) ஆம் உட்பிரிவின் கீழ் பேரவையினால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கு இணங்கியொழுகும்வரை, அவ் வளவுகளில் பேணப்படும் அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனத்தை மூடிவிடும்படி கட்டளையிடலாம்.

*இருக்கின்ற தனியார் மருத்துவ நிறுவனங்களைப் பதிவு செய்தல்.*

**5.** (1) நியமிக்கப்பட்ட தேதியன்று ஏதேனும் வளவில் தனியார் மருத்துவ நிறுவனமொன்றை தொழிற்படுத்துகின்ற அல்லது பேணுகின்ற எவரேனும் ஆள் அல்லது ஆட்கள்குழு, நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதியினுள் தம்மையும் மற்றும் சம்பந்தப்பட்ட வளவுகளையும் தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் பேரவையுடன் பதிவுசெய்வதற்கு அவசியமானவாறான அத்தகைய நடபடிகளை எடுத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், (1) ஆம் உட்பிரிவின் எற்பாடுகளுக்கு பயன்கொடுப்பதில் ஏற்ற மாற்றங்களுடன் அதற்கும் அது தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் பேரவை.*

**6.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தனியார் சுகாதார சேவைகளை ஒழுங்குபடுத்தும் பேரவை ஒன்று தாபிக்கப்பட வேண்டும். இது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமைச்சரால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்கள் :—

(i) அந்தந்தக் கழகத்தினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட, இதனகத்துப்பின்னர் தரப்பட்ட கழகங்களுள் ஒவ்வொன்றையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒவ்வொன்றுக்குமான ஒரு பிரதிநிதி —

(அ) சுயேச்சை மருத்துவ தொழிலர் கழகம் ;

(ஆ) இலங்கை பல்மருத்துவக் கழகம் ; அத்துடன்

(இ) பொது மருத்துவ தொழிலர் சங்கம்;

(ii) கணக்கியல், முகாமைத்துவம், சட்டம் மற்றும் தாதித்தொழில் போன்ற துறைகளை பிரதி நிதித்துவப்படுத்துவதற்கு ஒவ்வொன்றிற்கும் ஆளொருவர்; ஆயினும் அத்தகைய ஆள் அவரது அந்தந்தத்துறையில் சிறப்பான சேவையை அளித்துள்ள ஆளொருவர் ஆவார் ;

(iii) தனியார் வைத்தியசாலைகள் மற்றும் ஆதுலர் மனைகள் கழகத்திலிருந்து ஒன்பது பிரதிநிதிகள் ; அத்துடன்

(ஆ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :—

(i) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ii) தனியார் சுகாதாரத்துறையின் அபிவிருத்திக்குப் பொறுப்பான பணிப்பாளர் ;

(iii) இலங்கை மருத்துவப் பேரவையின் பதிவாளர் ; அத்துடன்

(iv) ஒவ்வொரு மாகாணத்தினதும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்.

(2) சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி பேரவையின் தவிசாளராதல் வேண்டும் என்பதுடன், தனியார் சுகாதாரத்துறை அபிவிருத்திப் பணிப்பாளர் அதனது செயலாளராகவிருத்தலும் வேண்டும்.

(3) பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறப்பு, பதவிவிலகுதல், அகற்றப்படுதல் என்பனமூலம் அல்லது வேறு வகையாகப் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதுவெனப் பேரவை கொள்ளுகின்ற ஏதேனும் காரணமின்றி பேரவையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்கு வருகைதரா திருப்பின் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(5) (அ) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப் பெண் ஏழு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(ஆ) தவிசாளர் பேரவையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் சமூகமாயி ராதபோது கூட்டங்களிற்கு தலைமைதாங்கவென சமூகமாயிருக்கும் உறுப்பி னர்கள் அவர்களிடையேயிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(6) அமைச்சர் பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒரு வரை அகற்றுவதற்கான காரணம் காட்டி எந்நேரத்திலும் அவ ரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

(7) பேரவையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அப்பொருள்பட அமைச்சருக்கு முகவரியிட்டு அனுப்பிவைக்கப் படும் கடிதமூலம் எந்நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

(8) இறப்பு, பதவிவிலகுதல், பதவியிலிருந்து அகற்றப்படுதல் என்பன மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரினால் பதவி வறிதாக்கப்படும்பட்சத்தில், அமைச்சர் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்துட்கொண்டு அத்தகைய உறுப்பினரை அடுத்துறுவதற்கு வேறு ஓர் ஆளை நியமித்தல் வேண்டும். வெற்றிடத்தை நிரப்பு வதற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியின்போது பதவிவகித்தல் வேண்டும்.

**7.** பேரவையானது, 6 ஆம் பிரிவின்கீழ் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரைக்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றையும் உடையதாதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

*பேரவையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல்.*

**8.** (1) பேரவையின் இலச்சினையானது, பேரவையின் செயலாளர் அல்லது பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் உறுப்பினரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

*பேரவையின் இலச்சினை.*

(2) பேரவையின் இலச்சினையானது பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) பேரவையின் இலச்சினையானது பேரவையின் தவிசாளரினதும் வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையிலன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது ; அவர்கள் இருவரும் தாங்கள் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

ஆயினும், தவிசாளர் பேரவையின் இலச்சினை ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படும் நேரத்தில் சமுகமளிக்கவியலாதவராக இருக்கின்றவிடத்து, அதன்சார்பில் தவிசாளரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவேறு எவரேனும் உறுப்பினர் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுவதற்கு தகுதியானவராதல் வேண்டும்.

(4) பேரவையின் இலச்சினையானது எந்தச் சாதனங்களில் அல்லது ஆவணங்களில் பொறிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனங்களின் அல்லது ஆவணங்களின் இடாப்பொன்றைப் பேரவையானது பேணிவருதல் வேண்டும்.

பேரவையின் குறிக்கோள்கள்.

**9**. பின்வரும் குறிக்கோள்களை எய்துவதற்கு மிகச் சிறந்த முறையெனப் பேரவை கருதுகின்ற அத்தகைய முறையில் பேரவையானது, இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) பதிவுசெய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங்களினாற் பேணப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்தல், அத்துடன் கண்காணித்தல் ;

(ஆ) அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனங்களினால் பேணப்படும் நியமங்களை மதிப்பீடு செய்யும் முறை ;

(இ) ஆட்சேர்ப்புக்கான ஆகக்குறைந்த தகைமைகள் அத்துடன் ஆளணியினரின் பயிற்சிக்கான ஆகக்குறைந்த நியமனங்கள் என்பன எல்லாத் தனியார் மருத்துவ நிறுவனங்களினாலும் கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிப்படுத்தல் ;

(ஈ) அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனங்களினால் அளிக்கப்படும் அல்லது ஏற்பாடு செய்யப்படும் நோயாளர் கவனிப்புச் சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்தல்.

பேரவையின் கடமைகளும் பணிகளும்.

**10**. பேரவையானது, பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :—

(அ) தனியார் மருத்துவ நிறுவனங்களில் நோயாளர் கவனிப்புக்காக, தர உறுதி நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தலும் அதனைக் கண்காணித்தலும் ;

(ஆ) அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள எல்லாப் பணியாட்டொகுதியினரினதும் ஆட்சேர்ப்புக்கான ஆகக்குறைந்த நியமங்களைப் பேணுதல் ;

(இ) இயைபான சுகாதார தகவல் மற்றும் புள்ளிவிபரங்கள் என்பவற்றைச் சேகரித்தலும் வெளியிடுதலும் ;

(ஈ) அந்தந்த தனியார் மருத்துவ நிறுவனங்களால் வழங்கப்படும் வசதிகளுக்கிணங்கத் தரப்படுத்தும் முறைமையொன்றைச் செயற்படுத்தல் ; அத்துடன்

(உ) ஒன்பதாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு பணிகள்.

*பேரவை அதன் கடமைகளையும் பணிகளையும் கையளித்தல்.*

**11.** பேரவை, அவசியமானதென அது கருதுகின்றவிடத்து, இச்சட்டத்தின் கீழான அதன் கடமைகளினதும் பணிகளினதும் புரிகையையும் நிறைவேற்றுகையையும் பேரவையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது உறுப்பினர்களுக்கு அல்லது பேரவையின் உறுப்பினர்களைக் கொண்டுள்ள குழுவொன்றுக்கு கையளிக்கலாமென்பதுடன், அவர்கள், பேரவையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய அத்தகைய கடமையை அல்லது பணியைப் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

*பேரவையின் நிதியம்.*

**12.** (1) பேரவையானது அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன பேரவையின் நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டும் :—

(அ) பேரவையின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) பேரவையினால் அதனுடைய பணிகளைப் புரிகையில் கட்டணங்களாக, வீதவரிகளாக, விதிப்பனவுகளாக அல்லது வேறு வகையாகப் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) மானியங்கள் அல்லது நன்கொடைகள் என்றவகையில் அதற்குக் கிடைக்கக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும், பிரயோகிக்கையிலும் நிறைவேற்றுகையிலும் புரிகையிலும் பேரவையினால் உறப்பட்ட செலவினங்களை ஈடு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் நிதியத்திலிருந்து செலுத்தப்படவேண்டும்.

*தனியார் மருத்துவ நிறுவனத்தின் தராதர அங்கீகாரம்.*

**13.** (1) அமைச்சர், பேரவையின் ஆலோசனையின்மேல், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலமாக, தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கான தராதர அங்கீகாரத் திட்டங்களை வகுத்தமைத்து, வலுப்படுத்துதல் வேண்டும். அத்தகைய கட்டளை, தராதர அங்கீகாரத்துக்கான கட்டளைக்கற்களாக அமைகின்ற வசதிகள், சேவைகள் மற்றும் வேறேதேனும் காரணி என்பவற்றைக் குறித்துரைக்கின்ற எல்லா விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய தராதர அங்கீகாரத் திட்டங்களை அல்லது அவற்றுக்கு அடுத்துப்பின்னர் செய்யப்படும் மாற்றங்களைச் செயற்படுத்தமுன்னர், சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒன்பது மாத கால அவகாசம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்படும் கட்டளை எப்படியிருப்பினும், தனியார் மருத்துவ நிறுவனமொன்று தராதர அங்கீகாரம் மீதான பேரவையின் இறுதி முடிவு அத்தகைய நிறுவனத்துக்கு அறிவிக்கப்படும் அத்தகைய காலம்வரை தொடர்ந்து அதன் சேவைகளை வழங்குதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், தனியார் மருத்துவ நிறுவனமொன்று தராதர அங்கீகாரத் தகைமையைப் பெறாத பட்சத்தில், தராதர அங்கீகாரத் தகைமையைப் பெறுவதற்காக சுகாதாரம் என்னும்

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நியமங்களை எய்துவதற்கு அத்தகைய நிறுவனத்துக்கு எழுத்தில் போதிய காலம் வழங்கப்படுதல் வேண்டும்.

(3) தராதர அங்கீகாரத் திட்டங்களிலான விபரங்களைத் தீர்மானிப்பதில் பேரவைக்கு உதவிபுரிவதற்கும், ஆலோசனையளிப்பதற்கும், அத்தகைய திட்டங்களின் நியதிகளின்படி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பரிசோதனை செய்வதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் உதவுவதற்கும், அவர்களின் அபிப்பிராயத்தில் அவசியமான அறிவை, நிபுணத்துவத்தை, நுட்பத்தை அல்லது படிப்பை உடைய ஆட்கள் குழாமொன்றைப் பேரவையானது அவசியமானவிடத்து அழைத்தல் வேண்டும்.

(4) பேரவையானது தராதர அங்கீகாரத் திட்டங்களைக் கட்டங் கட்டமாக அல்லது அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் செயற்படுத்தலாம்.

(5) இப்பிரிவின்கீழ் தனியார் மருத்துவ நிறுவனமொன்றின் தராதர அங்கீகாரம், அத்தகைய நிறுவனம் உயிர்காக்கும் அவசர காலச் சேவையை வழங்குவதை மட்டுப்படுத்துவதாதல் ஆகாது.

உட்பிரவேசிக்கவும் சோதனையிடவுமுள்ள தத்துவம்.

**14.** (1) அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு முன்னறிவித்தலின்றி, இரவில் அல்லது பகலில் எந்த நேரத்திலும், ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்தினுள் அல்லது அதனோடு இணைந்துள்ள எவையேனும் வளவுகளினுள் பிரவேசித்து, இச்சட்டத்தின் நோக்கத்துக்காக, ஏதேனும் சோதனையை, பரிசோதனையை, நுண்ணாய்வை அல்லது ஆய்வை நிறைவேற்றும் நோக்கத்துக்கு நியாயமான வகையில் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் செய்தல் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளதெதுவும், நீதிமன்றத்தின் அனுமதியைத் தேவைப்படுத்துகின்ற அந்தரங்கத் தகவல் தவிர்ந்த எவையேனும் பதிவேடுகளை சோதனை செய்வதற்கு, பேரவையினால் வழங்கப்படும் விசேட அதிகாரவளிப்பு

இருந்தாலொழிய, நிறுவனமொன்றில் உள்ள எவரேனும் நோயாளி தொடர்பான ஏதேனும் மருத்துவ பதிவேட்டைச் சோதனையிட எவரேனும் ஆளுக்கு அதிகாரமளிப்பதாக கருதப் படுதலோ அல்லது பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

(3) பேரவையினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரை, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளினால் அளிக்கப்பட்ட தத்து வங்களைப் பிரயோகிக்கையில், எதிர்க்கும் அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடும் ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழான தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது அந்தந்த மாகாணசபையின் சுகாதார சேவை களின் மாகாணப் பணிப்பாளர் அல்லது மாகாணப் பிரதிப் பணிப்பாளர் அல்லது பேரவையின் விதப்புரையின்மீது வர்த்த மானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான வேறு எவரேனும் அலுவலர் எனப் பொருள்படும்.

தவறுகள்.

**15.** (1) (அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை அல்லது விதியை அல்லது சட்டமுறையாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை அல்லது பணிப்பை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பதிவுச் சான்றிதழில் அடங்கியுள்ள ஏதேனும் நிபந்தனையை அல்லது ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கியொழுகத் தவறு கின்ற,

எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் அல்லது ஆட்கள் குழு இச்சட் டத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிய எத்தனிக் கின்ற ; அல்லது

(ஆ) இச்சடத்தின்கீழ் தவறொன்றைப் புரிய இன்னோர் ஆளுக்கு உதவுகின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழான ஒரு தவறுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) அல்லது (2)க்குக் கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கெதுவும் பேரவையின் எழுத்திலான அங்கீகாரத்துடனன்றித் தொடுக்கப்படுதலாகாது.

தண்டங்கள்.

**16.** (1) இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆள், அத்தகைய குற்றத்தீர்ப்பின் மேல் –

(அ) அத்தகைய தவறு மனித உயிருக்கு ஊறுவிளைவிப்பதனை அல்லது பொதுமக்கள் உடனலத்திற்கு அல்லது பொதுமக்கள் காப்புக்குப் பாரதூரமான பங்கம் விளைவிப்பதனை உட்படுத்துமிடத்து, ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு ஆளாதல் வேண்டும்;

(ஆ) வேறேதேனும் தவறுக்காக –

(i) முதற்றடவையாகப் புரியப்படும் தவறின் விடயத்தில் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கும்;

(ii) இரண்டாம் தடவையாக அல்லது அடுத்துப் பின்னர் புரியப்படும் தவறின் விடயத்தில், இருபதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணம் ஒன்றுக்கும் ; அத்துடன்

(iii) தொடர்ந்து புரியப்படும் தவறின் விடயத்தில், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் தவறானது தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஓராயிரம் ரூபாவை விஞ்சாத மேலதிகக் குற்றப்பணத்துக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையிலான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும்

ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக் கப்பட்ட ஓர் ஆள், அதேபோன்ற அல்லது அதையொத்த இரண்டாம் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, இரண் டாம் தவறுக்கு அவருக்கு குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிவான் அத்த கைய ஆளுக்கு இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் அளிக்கப்பட்ட அல்லது வழங்கப் பட்ட ஏதேனும் சான்றிதழை, அதிகாரவளிப்பை அல்லது அனு மதிப்பத்திரத்தை இல்லாதாக்குதல் வேண்டுமென்பதுடன், அத்த கைய இல்லாதாக்குகை பற்றிப் பேரவைக்குத் தெரிய செய்வித்தலும் வேண்டும்.

ஆட்கள் குழு ஒன்றினால் புரியப்பட்ட தவறுகள்.

**17.** இச்சட்டத்தின் கீழான அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதே னும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின் கீழான தவறொன்று ஓர் ஆட்கள் குழுவினால் புரியப்பட்டவிடத்து, அப்போது —

(அ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றா யின், தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் பணிப் பாளர், பொதுமுகாமையாளர், செயலாளர் அல்லது அக்குழுவின் இவர்களையொத்த வேறு நிறைவேற்று அலுவலர் என்போராகவிருந்த ஆளொவ்வொருவரும்;

(ஆ) அக்குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிரா திருப்பின், தவறு புரியப்பட்ட நேரத்தில் அக்குழுவின் தவிசாளர், பொதுமுகாமையாளர், செயலாளர் அல் லது இவற்றையொத்த வேறு நிறைவேற்றலுவலராக விருந்த ஆளொவ்வொருவரும்,

அத்தகைய தவறு தான் அறியாமல் புரியப்பட்டது என அல்லது அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகித்தார் என அவர் எண்பித்தாலொழிய, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**18.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களுக்குப் பங்கமின்றி, அமைச்சர், பேரவையின் ஆலோசனையின்மீது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :—

(அ) தனியார் மருத்துவ நிறுவனங்களைப் பதிவுசெய்தலில் அல்லது பதிவைப் புதுப்பிப்பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களினால் இணங்கியொழுகப் படவேண்டிய வழிகாட்டுநெறிகள் ;

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி அளிக்கப்பட்ட அல்லது புரியப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக அறவிடப் பட வேண்டிய அல்லது பெற்றுக்கொள்ளப்படவேண் டிய வீதவரிகள், இறுப்பனவுகள் மற்றும் வேறெவை யேனும் செலவுகள் என்பன ;

(இ) பதிவுசெய்யப்பட்ட தனியார் மருத்துவ நிறுவனங் களின் எல்லாக் கட்டிடங்களினதும் மற்றும் வளவுக ளினதும் அமைப்பு, நிர்மாணம், வெளிச்சமூட்டுதல், சேர்த்தல்கள், சீர்திருத்தங்கள் அத்துடன் சுத்தம் பேணுதல் ;

(ஈ) தொற்று நோயாளர்களை எச்சூழ்நிலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கலாம் என்பதுவும் அத்த கைய பட்சத்தில் எடுக்கப்பட வேண்டிய முற்காப்பு களும் ;

(உ) தொற்றுநோயைத் தடுப்பதற்காகவும் கட்டுப்படுத்து வதற்காகவும் அனைத்துலக ரீதியாக ஏற்றங்கீகரிக் கப்பட்ட முற்காப்புகளைக் கடைப்பிடித்தல் ;

(ஊ) தனியார் மருத்துவ நிறுவனங்களினால் அளிக்கப் படும்சேவைகளை அல்லது நிறைவேற்றப்படும் பணிக ளைப் பொறுத்து அத்தகைய நிறுவனங்களை வகுதிக ளாக வகுப்பாக்கஞ் செய்தல் ;

(எ) ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்திற்கெதிராக அல்லது அதனைச் சேர்ந்த எவரேனும் ஆளுக்கெதி ராக அக்கறைகொண்ட அல்லது இன்னலுற்ற எவரே

னும் ஆளிடமிருந்து ஆன ஏதேனும் முறைப்பாட்டை ஏற்றுக் கவனிப்பதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் அல்லது செயல்முறையும் அதனை இறுதியாக தீர்த்து வைத்தலும் ;

(ஏ) தனியார் மருத்துவ நிறுவனங்களினால் அளிக்கப்படும் இருப்பிட வசதி, மருந்துகள், சேவைகள் என்பவற்றுக்கான இறுப்பனவுகள் ; அத்துடன்

(ஐ) இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்படும் வழக்குகளை நடாத்துவதற்கு தகுதிவாய்ந்த அலுவலர்களை நியமித்தல்.

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின்முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்.

**19.** (1) பேரவையானது, பின்வரும் கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும் விதிகளை ஆக்கலாம் :—

(அ) தனியார் மருத்துவ நிறுவனமொன்றின் பதிவேடுகள், புத்தகங்கள், இடாப்புகள், சிட்டைகள், பற்றுச்சீட்டுகள், விவரத்திரட்டுகள், கூற்றுக்கள், படிவங்கள் மற்றும் வேறு ஆவணங்கள் என்பவற்றை பேணுதல் ;

(ஆ) ஒரு தனியார் மருத்துவ நிறுவனத்தால் அமைச்சரின் அமைச்சுக்குக் காலத்துக்குக் காலம் கொடுத்துதவப் படவேண்டிய அறிக்கைகள், விபரத்திரட்டுகள், கூற்றுக்கள் மற்றும் ஏனைய தகவல்கள் ;

(இ) நோயாளர் கூடங்களின் அல்லது அறைகளின் ஆகக் குறைந்த அளவும் ஒவ்வொரு நோயாளிக்கும் குறித் தொதுக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த தளப்பரப்பும்;

(ஈ) அத்தகைய தனியார் மருத்துவ நிறுவனத்தில் உள் நோயாளிகளாகவிருப்போருக்கும் அங்கு தொழிலுக் கமர்த்தப்பட்டுள்ள ஆளணியினருக்கும் போதிய மலசலகூட, குளிப்பு வசதிகளை ஏற்பாடு செய்தல் ;

(உ) பொது அல்லது விசேட தன்மையினவான தனியார் மருத்துவ எந்திரத் தொகுதி, சாதனங்கள், உபாயங் கள், பாத்திரங்கள், உபகரணங்கள், மட்பாண்டத் தொகுதி, பொருத்திகள், தளபாடங்கள் மற்றும் ஏனைய தேவைப்பொருட்கள் ;

(ஊ) குறித்துரைக்கப்பட்ட நோய்களுக்கு எதிராக நிறுவனங் களில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளணியினருக்கு தடைக்காப்பளித்தல் ;

(எ) ஒரு மகப்பேற்று மனைக்கு அல்லது அத்தகைய கர்ப்பிணித் தாய்மாரை அனுமதித்து அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்குத் தனிவேறானவையும் பிரத்தி யேகமானவையுமான வசதிகளைக் கொண்ட அத்த கைய வேறு தனியார் மருத்துவ நிறுவனத்துக்குத் தவிர, மகப்பேற்றுக் கர்ப்பிணித் தாய்மாரை அனுமதிப் பதனைத் தடை செய்தல் அல்லது மட்டுப்படுத்துதல் ;

(ஏ) ஒரு மகப்பேற்று மனைக்கு அல்லது மகப்பேற்றுத் தாய்மாரை அனுமதியளிப்பதற்கும் அவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கும் தனிவேறானவையும் புறநீங்க லானவையுமான வசதிகளைக் கொண்டுள்ள அத்த கைய வேறு நிறுவனத்துக்கு கர்ப்பிணித் தாய்மார் தவிர்ந்த ஏனைய நோயாளிகளை அனுமதித்தலைத் தடைசெய்தல் அல்லது மட்டுப்படுத்துதல் ;

(ஐ) ஆகக் குறைந்த தகைமைகள், அத்தகைய ஆளணியினரினால் பின்பற்றப்படவேண்டிய தொடங்கிவைப்பு மற்றும், உட்சேவைப் பயிற்சி அத்துடன் நினைவூட்டுப் பயிற்சிநெறிகள் உட்பட பணியாட்டொகுதியிலமர்த்தும் மாதிரிகளை வரையறுத்தலும் ;

(ஒ) விசேட சிகிச்சைத் துறைகள் தொடர்பாகப் பேணப்படவேண்டிய விசேட திறமைப் பகுதிகள், துணைநிலைச் சேவைகள் என்பவற்றை வரையறுத்தல் ;

(ஓ) கழிவுப் பொருட்கள் மற்றும் குப்பைக் கூளங்களைக் கையாண்டு தீர்த்தல் ;

(ஔ) நோயாளர் கூடங்களில் உள்ள நோயாளிகளினதும் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆளணியினரினதும் விகிதத்தின் விகிதாசாரப்படி நோயாளர் கூடங்களில், சமையலறைகளில், குளியலறைகளில் அத்துடன் மலசல கூடங்களில், தொட்டிகள், நீர்க்குழாய்கள் மற்றும் ஏனைய வெளிப்போக்கிகள் என்பவற்றை ஏற்பாடு செய்தல் ;

(க) நோயாளிகளின் உடனலத்தைப் பேணுவதற்காக, வீடமைப்பு, வதிவிடக்குடிமனைகள் அல்லது போக்குவரத்து வசதிகள் என்பவற்றுக்கு ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(ங) நிறுவன சொத்துக்கள், எந்திரத்தொகுதி மற்றும் சாதனம் எல்லாவற்றையும் பேணுவதற்குப் போதுமான நிபுணர்களை ஏற்பாடு செய்தல்.

(2) பேரவையால் ஆக்கப்படும் விதி எதுவும் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்தாலொழிய பயனுடையதாதலாகாது.

பொருள் கோடல்.

**20.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய —

"தராதர அங்கீகாரம்" என்பது, ஒரு தனியார் மருத்துவ நிறுவனத்தின் தொழில் நுட்பத்தகுதி, சேவையின் தரம்

மற்றும் வசதிகள் என்பவற்றை அத்தாட்சிப்படுத்தும் நோக்கத்துக்காகக் கடைப் பிடிக்கப்படும் ஒரு நடைமுறை என்று பொருளாகும் ; அத்துடன்

"தனியார் மருத்துவ நிறுவனம்" என்பது, ஏதேனும் நோயினால் ஊறினால் அல்லது உடற்பலயீனத்தினால் பீடிக்கப்பட்டுள்ள ஆட்களை ஏற்பதற்கும், அவர்களுக்கு மருத்துவ மற்றும் தாதித்தொழிற் கவனிப்பையும் சிகிச்சையையும் வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு முன்னங்கொள்ளப் படும் ஏதேனும் நிறுவனம் அல்லது தாபனம் என்றும், ஒரு வைத்தியசாலை, ஆதுலர்மனை, மகப்பேற்றுமனை, மருத்துவ ஆய்வுகூடம், இரத்தவங்கி, பல் அறுவை மருத்துவ நிலையம், மருந்துச்சாலையும் அறுவை மருத்துவ நிலையமும், நோயாளிகளைப் பரிசோதிக்கும் அறை, மற்றும் சுகாதாரத் தடைக்காப்பை அல்லது சுகாதார மேம்பாட்டு சேவையை வழங்கும் ஏதேனும் நிறுவனம் என்றும் பொருளாகும், ஆனால், அரசினால் பேணப்படுகின்ற அல்லது கட்டுப்படுத்தப்படுகின்ற ஓர் அவதானிப்பு மனை, மனநோயாளர் வைத்தியசாலை, வைத்தியசாலை, ஆதுலர் மனை, மருந்துச்சாலை, மருத்துவ நிலையம் அல்லது வேறெவையேனும் வளவுகள் அல்லது ஏதேனும் மருந்தை, மருத்துவத் தயாரிப்பை அல்லது மருந்தாக்க உற்பத்திப் பொருளைக் கலப்பதற்கும் விற்பதற்கும் புறநீங்கலாகப் பயன்படுத் தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்படுவதற்கு முன்னங்கொள்ளப்படுகின்ற ஏதேனும் தனியார் மருந்துச்சாலை அல்லது வாகடச்சாலை அல்லது மருந்துக் கடை அல்லது 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுள்வேதச் சட்டத்தினதும் 1970 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஓமியோபதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின்கீழ், ஏதேனும் நோக்கத்துக்காகப் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவனம் அல்லது வளவு கள் என்பவற்றை உள்ளடக்காது.

*நீக்குதல்கள்.*

**21.** (1) (220 ஆம் அத்தியாயமான) ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) ஆதுலர் மனைகள் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் நீக்கப்பட்டமை எப்படியிருப்பினும், அதன்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் தனியார் மருத்துவ நிறுவனத்தின் பதிவானது செல்லுபடியான தாயும் பயனுள்ளதாயும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதக் காலப்பகுதிக்கு அவ்வாறு செல்லுபடியானதாயும் பயனுள்ளதாயும் தொடர்ந்தி ருத்தலும் வேண்டும். அந்தக் காலப் பகுதியினுள் அத்தகைய மருத்துவ நிறுவனம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி பதிவுக்காக விண்ணப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின் றது.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மருத்துவ நிறுவனம் அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக் குள் அவ்வுட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக இச்சட்டத் தின் கீழான பதிவைப் பெற்றுக்கொள்ளத் தவறுமிடத்து, நீக்கப் பட்ட சட்டத்தின்கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட பதிவானது அத்த கைய குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்றதிலிருந்தும் முடிவுற்ற பின்னரும் செல்லுபடியில்லாதொழிதலும் பயனில்லா தொழிதலும் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**22.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்